

முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம் கல்லணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தொழில்துறை அமைச்சர் டாக்டர். டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் நேற்று (31.07.2024) திறந்து வைத்தார்கள், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மா.பிரதீப் குமார் (திருச்சி), திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் (தஞ்சாவூர்), ஏ.பி.மகாபாரதி (மயிலாடுதுறை), திருமதி.தி.சாருஸ்ரீ (திருவாரூர்), திருமதி.மு.அருணா (புதுக்கோட்டை). சட்டமன்ற உறுப்பினர்கள் கதிரவன் (மண்ணச்சநல்லூர்), துரை.சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்), கா.அண்ணாதுரை (பட்டுக்கோட்டை). என்.அசோக்குமார் (பேராவூரணி), வி.பி.நாகைமாலி (கீழ்வேளூர்), தாட்கோ தலைவர் இரா.மதிவாணன், மாநகராட்சி மேயர்கள் மு.அன்பழகன் (திருச்சிராப்பள்ளி), சண்.இராமநாதன் (தஞ்சாவூர்), மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி.உஷாபுண்ணியமூர்த்தி, துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி, நீர்வளத்துறை கண்காணிப்பு பொறியாளர்கள் சண்முகம், திரு.சிவக்குமார் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், நீர்வளத்துறை அலுவலர்கள் உடன் உள்ளனர்.



நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ரூ.1578.30 இலட்சங்கள் மதிப்பீட்டில் விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், சென்னம்பட்டி வலது பிரதான கால்வாய் நெடுக்கை 1120 மீ அருகே தெற்கு ஓடையின் குறுக்கே தடுப்பு பகிர்மான கட்டடம் கட்டி பாசன நீர் வழங்குதல் மற்றும் சென்னம்பட்டி வலது பிரதான கால்வாய்களை புனரமைத்தல் போன்ற பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்ச்சியில் காரியாபட்டி ஒன்றிய செயலாளர் கண்ணன், காரியாபட்டி பேரூர் செயலாளர் ஆர்.கே.செந்தில், மாவட்ட கவுன்சிலர் தங்க தமிழ்வானன், குண்டாறு வடிநிலைக் கோட்டம் செயற்பொறியாளர் வி.நிறைமதி, குண்டாறு வடிநிலை உபகோட்டம் உதவி செயற்பொறியாளர் கி.முத்துச்சாமி மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், ஒருங்கிணைந்த நிலப்பரப்புகளின் மேம்பாட்டுக்கான

# திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஒப்பந்தம்!

## ரூ. 57 லட்சத்துக்கு கையெழுத்தானது!

சென்னை,ஆக.1-

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் 2 வழித்தடம் 3 மற்றும் 5ல் அமையவுள்ள மெட்ரோ இரயில் நிலைய நுழைவு/ வெளியேறும் பகுதிகளில் ஒருங்கிணைந்த நிலப்பரப்புகளின் மேம்பாட்டுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஒப்பந்தம் M/s SREI Infrastructure Finance நிறுவனத்திற்கு ரூ.57 லட்சம் மதிப்பில் கையெழுத்தானது. இதற்கான ஏற்பு கடிதம் (LOA) M/s SREI Infrastructure Finance நிறுவனத்திற்கு 18.06.2024 அன்று வழங்கப்பட்டது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மு.அ.சித்திக் இ.ஆ.ப., மற்றும் திட்ட இயக்குநர் தி. அர்ச்சுனன் முன்னிலையில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பாக தலைமை பொது மேலாளர் டி.லிவிங்ஸ்டோன் எலியாசர், (திட்டம் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), மற்றும் M/s SREI Infrastructure Finance நிறுவனத்தின் சார்பாக சுதீப்தா மித்ரா ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்நிகழ்ச்சியில், தலைமை பொது மேலாளர் திருமதி. ரேகா பிரகாஷ், (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் M/s SREI Infrastructure Finance நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பயணச் சீட்டு வருவாயுடன், கூடுதல் வருவாய் ஈட்ட திட்டமிட்டுள்ளது. பல மெட்ரோ இரயில் நிலையங்களில், வணிக இடங்களை உருவாக்கி வளர்ச்சிக்கு சாத்தியக்கூறுள்ள பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. மாதவரம் பால் பண்ணை, வேணுகோபால் நகர், சாஸ்திரி நகர், ஸ்ரீனிவாச நகர் அயனாவரம், ஓட்டேரி, பெரம்பூர் பேரக்ஸ், புரசைவாக்கம், சேத்துப்பட்டு, ஸ்டெர்லிங் சாலை, நுங்கம்பாக்கம், ராயப்பேட்டை, ஆர்.கே. சாலை, திருமயிலை மற்றும் அடையார் பேருந்து பணிமனை ஆகிய மெட்ரோ இரயில் நிலையங்களுக்காக எடுக்கப்பட்ட இடங்களில் வணிக வளர்ச்சி மேம்பாட்டுக்கான ஒப்பந்தம் இன்று வழங்கப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மாற்று வருவாயை (மெட்ரோ இரயில் சேவை வருவாய் கட்டணம் அல்லாத) அதிகரிப்பதற்காக இது போன்ற பல விரிவான திட்ட அறிக்கைகளை தயாரிக்க திட்டமிட்டுள்ளது.

### ஆக. 10ஆம் தேதிக்குள்

# அனைத்து மண்டலங்களிலும் தீவிரத் தூய்மைப் பணிகள்!

## சென்னை மாநகராட்சி தகவல்!

சென்னை,ஆக.1-

பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 மண்டலங்களிலும் உள்ள பேருந்து சாலைகளில் ஆகஸ்ட் 10ஆம் தேதிக்குள் தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு குப்பைகள், கட்டிடக் கழிவுகள் மற்றும் கைவிடப்பட்ட வாகனங்கள் அனைத்தும் அகற்றப்படும்.

உட்புறச் சாலைகளில் இப்பணிகள் ஆகஸ்ட் 11ஆம் தேதி முதல் தொடங்கி நடைபெறும்.

கடந்த 9 நாட்களில் மட்டும் 4,161.33 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் மற்றும் கட்டிடக் கழிவுகளும், 688 கைவிடப்பட்ட வாகனங்களும் அகற்றப்பட்டன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கடந்த 22.07.2024 முதல் தினசரி 3 முதல் 4 மண்டலங்களிலுள்ள போக்குவரத்து சாலைகளில் தீவிரத் தூய்மைப் பணிகள் மற்றும் கைவிடப்பட்ட வாகனங்களை அகற்றுதல், சாலைகளில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், 29.07.2024 அன்று முதல் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களிலும் இப்பணிகள் தொடங்கி நடைபெற்று வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் தீவிரத் தூய்மைப் பணியில் 22.07.2024 முதல் 30.07.2024 வரையிலான 9 நாட்களில் மட்டும் 458 மெட்ரிக் டன் திடக்கழிவுகள், 3,703.33 மெட்ரிக் டன் கட்டிடக் கழிவுகள் என மொத்தம் 4,161.33 மெட்ரிக் டன் குப்பைக் கழிவுகள் மற்றும் கட்டிடக் கழிவுகளும், 688 கைவிடப்பட்ட வாகனங்களும் அகற்றப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 மண்டலங்களிலும் உள்ள பேருந்து சாலைகளில் ஆகஸ்ட் 10ஆம் தேதிக்குள் தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குப்பைகள், கட்டிடக் கழிவுகள் மற்றும் கைவிடப்பட்ட வாகனங்கள் அனைத்தும் அகற்றப்படும். உட்புறச் சாலைகளில் இப்பணிகள் ஆகஸ்ட் 11ஆம் தேதி முதல் தொடங்கி தீவிரமாக நடைபெறும்.

இப்பணிகள் மேற்கொள்வதன் மூலம் போக்குவரத்து வாகனங்கள் சீராகச் செல்வதற்கும், நடைபாதைகளில் பொதுமக்கள் எவ்வித இடர்பாடுமின்றி நடந்து செல்வதற்கும் வழிவகை ஏற்படும். மேலும், பேருந்து சாலைகளில் இடையூறாக உள்ள மரக்கிளைகள் மற்றும் தொங்கும் கேபிள் ஒயர்களை அகற்றுதல், எரியாத மின்விளக்குகளை சீர் செய்து ஒளிர வைத்தல், சாலைகளை சீரமைத்தல் ஆகியவற்றின் மூலம் சீர்மிகு சாலையாக பொதுமக்களுக்கு பெரும் பயனுள்ளதாக அமையும்.



வேளச்சேரி, 177 அ வட்ட கழகத்தை சார்ந்த மறைந்த மூத்த கழக செயல்வீரர். குறிஞ்சி மலர் தளபதி மு.க.ஸ்டாலின் நற்பணி மன்ற தலைவர், வி.ஏகாம்பரம் அவர்களின் நினைவேந்தல், படத்திறப்பு நிகழ்ச்சியில், கழக தேர்தல் பணிக்குழு செயலாளர்,பெருநகர சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சி பொருளாளர், 177,வது,வார்டு மாமன்ற உறுப்பினர், வேளச்சேரி. பெ.மணிமாறன், மலரஞ்சலி செலுத்தினார் மறைந்த வி.ஏகாம்பரம் குடும்பத்தினருக்கு மாமன்ற உறுப்பினர், நிதியாக ரூபாய், 25,000 வழங்கினார். உடன் மாவட்ட கழக உறுப்பினர்,வி.பார்த்தசாரதி பொருளாளர், இரா.ஏழுமலை பகுதி பிரதிநிதி கோ.சீனுவாசன், சுரேஷ்குமார் உள்ளிட்டோர் இருந்தனர்.

### நீலகிரி மாவட்டத்தில்

# 20,000 மாணவ மாணவிகளுக்கு விலையில்லா சீருடைகள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேச்சு!

நீலகிரி,ஆக.1-

நீலகிரி மாவட்டத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா சீருடைகள் வழங்கும் நிகழ்ச்சியினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் துவக்கி வைத்து, மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா சீருடைகளை வழங்கினார்.

நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம், தொட்டபெட்டா ஊராட்சி, ஓடைக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா சீருடைகளை வழங்கினார். 2004 மாணவர்களுக்கு சீருடை வழங்கல்பட்டுள்ளதாக அப்போது அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து, அதனை மிகவும் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் பள்ளிக்கல்வித்துறைக்கு கூடுதல் கவனம் செலுத்தி, அதிக நிதி ஒதுக்கி, வரலாற்று சிறப்பு மிக்க திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். பள்ளி மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் இல்லம் தேடிக் கல்வி திட்டம், காலை உணவுத்திட்டம், நான் முதல்வன் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை அரசு பள்ளியில் பயிலும் மாணவியர்களுக்கு புதுமைப் பெண் திட்டத்தின்கீழ் உதவித் தொகை, மாணவர்களும் பயன்பெறும் வகையில் அரசால் துவங்கபடவுள்ள தமிழ் புதல்வன் திட்டம், படித்து முடித்து வேலைநாடுநோர்களுக்கு வேலை வாய்ப்பு முகாம்கள் மூலம் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தி தருதல் போன்ற எண்ணற்ற அறிவிப்புகள், திட்டங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசால் அறிவித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.



நீலகிரி மாவட்டத்தில், காலை உணவுத்திட்டத்தை பொறுத்தவரை 316 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 11,164 மாணவ, மாணவியர்கள் பயன்பெற்று வருகிறார்கள். புதுமை பெண் திட்டத்தின்கீழ் நமது மாவட்டத்தில் 1,067 மாணவியர்கள் மாதந்தோறும் ரூ.1,000 - பெற்று பயன்பெற்று வருகிறார்கள். பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு வழங்கும் விலையில்லா சீருடைகள் சரியான முறையில் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில், தமிழ்நாடு அரசு சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் விலையில்லா சீருடை 2024-2025 கல்வியாண்டில் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

மேலும், இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாணவ, மாணவியர்களுக்கும் வருடத்திற்கு நான்கு இணை சீருடைகள் வழங்கப்பட்டு வருகிறது. சீருடைகள் மாணாக்கர்களுக்கு சரியான முறையில் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில், இம்முறை தைக்கப்பட்ட சீருடைகள் நேரடியாக பள்ளிகளுக்கு சென்று சமூகநலத்துறையின் கீழ் செயல்படும் மகளிர் தையற் தொழிற் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மூலம் விநியோகம் செய்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், நமது மாவட்டத்தில் உள்ள 522 பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் 6,830 மாணவர்களும், 6,792 மாணவியர்களும், 6 முதல் 8ம் வகுப்பு வரை 3,304 மாணவர்களும் மற்றும் 3,116 மாணவியர்களும் என மொத்தம் 20,042 மாணாக்கர்கள் விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ளனர். அரசு பள்ளிகளில் கல்வி கற்றலும், உட்கட்டமைப்பு வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளது. நமது மாவட்டத்தில் பல அரசு பள்ளிகளில் மாணவ, மாணவியர்கள் 100 விழுக்காடு தேர்ச்சி விகிதம் பெற்றுள்ளார்கள். எனவே பொதுமக்கள் தங்கள் பிள்ளைகளை அரசுப் பள்ளிகளில் சேர்க்க முன்வரவேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ், உதகை வருவாய் கோட்டாட்சியர் மகராஜ், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி. கீதா, மாவட்ட சமூக நல அலுவலர் பிரவீணா தேவி, உதகை வட்டாட்சியர் சரவணகுமார், உதகை நகரமன்றத்தலைவர் திருமதி. வாணீஸ்வரி, உதகை ஊராட்சி ஒன்றிய தலைவர் மாயன்(எ) மாதன், உதகை வட்டார வளர்ச்சி அலுவலர் அண்ணாதுரை, திட்டக் குழு உறுப்பினர் ஜார்ஜ், ஓடைக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் திருமதி. ஷோபா, தொழிற்கூட்டுறவு அலுவலர் சுப்பிரமணி, தொழிற்கூட்டுறவு மேற்பார்வையாளர் கிருஷ்ணமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம் மல்லாங்கிணற்றில் முன்னாள் அமைச்சர் வே.தங்கப்பாண்டியனின் 27வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சரும், சிவகங்கை மாவட்ட கழக செயலாளருமான கேஆர்.பெரியகருப்பன் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் மாவட்ட கழக துணைசெயலாளர்கள் த.சேங்கைமாறன், கே.எஸ்.எம்.மணிமுத்து, திருப்பத்தூர் பேரூர் கழக செயலாளர் ஆர்.கார்த்திகேயன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார் இளைஞரணி சதீஷ் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன், நேற்று (31.07.2024) திருவள்ளூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையத்தில் நடைபெற்று வரும் டி.என்.பி.எஸ்.சி குரூப் 2 பயிற்சி வகுப்புகளை ஆய்வு செய்து பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட மாணவர்களுடன் கலந்துரையாடினார். உடன் திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் எ.சுந்தரவல்லி, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபு சங்கர், மண்டல இணை இயக்குனர் (வேலை வாய்ப்பு) ஆர்.பிரபாகரன், நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், நகர மன்ற துணைத் தலைவர் சி.சு. ரவிச்சந்திரன் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அலுவலர்கள் உள்ளனர்.